இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 323 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 20 – சனிக்கிழமை 04 ஜூலை 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 323 : Thiruvalluvar Year - 2057 - Aani 20 - Saturday 04 July 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் கிழக்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த காங்கயம் நகரச் செயலாளர் ஏ.வெங்கடேஷ்வரன், பொதுக்குழு உறுப்பினர் ப.ராசேந்திரன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் தலைமையில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இணையதள அமைப்பாளர் கபிலன் கணேசமூர்த்தி கழகத்தில் இணைந்தார்.

### ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த

# ம.தி.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

**சென்னை, ஜூலை 4-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் தலைமையில் முன்னாள் மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (02.07.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்டம், ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் அவர்கள், தலைமையில் ம.தி.மு.க.வைச் சேர்ந்த தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் பி.வி.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இணையதள அமைப்பாளர் கபிலன் கணேசமூர்த்தி, மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் எஸ்.நல்லசிவம்,

மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முன்னாள் செயலாளர் வி.பி. ஈஸ்வரமூர்த்தி, முன்னாள் அவைத்தலைவர் எஸ்.லோகநாதன், முன்னாள் பொருளாளர் டி.சிவசுப்பிரமணி, கொடுமுடி ஒன்றிய முன்னாள் செயலாளர் பி.துரைசாமி, கொடுமுடி பேரூர் முன்னாள் செயலாளர் டி.பாலசுப்பிரமணியம், மாவட்ட தொண்டர் அணி முன்னாள் அமைப்பாளர் வி.பி.பழனிவேல் ராஜ்,



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் தலைமையில் முன்னாள் மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர்கள் கே. ஜெயபிரகாஷ், த.வினோத் குமார், ஈரோடு மாநகர் மாவட்ட பொருளாளர் குணசேகரன், ஈரோடு மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கதிர்வேல், கழக வெளியீட்டு அணி மாநில துணைச் செயலாளர் நாகராஜ், ஈரோடு மாநகர் வீரமணி ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் மு.பெ. சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்!**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் கிழக்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த காங்கயம் நகரச் செயலாளர் ஏ.வெங்கடேஷ்வரன், பொதுக்குழு உறுப்பினர் ப.ராசேந்திரன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (02.07.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கயம் நகரச் செயலாளர் ஏ.வெங்கடேஷ்வரன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் ப.ராசேந்திரன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் இல.பத்மநாபன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### ‘மாற்றம்’ என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தவர்கள் - மாநில உரிமைகளைத் தாரை வார்க்காமல்

# ஆளுநரின் ஆய்வு நடைமுறையை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 4-**

**மாற்றம் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தவர்கள் மாநில உரிமைகளைத் தாரை வார்க்காமல் ஆளுநர் ஆய்வு செய்யும் நடைமுறையை உடனே நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

ஆளுநர் ஆய்வு செய்தார்’ என்ற கூவத்தூர் ஆட்சிக் கால வரலாறு, தற்போதைய குதிரை பேர ஆட்சியில் மீண்டும் திரும்புகிறது.



**மக்கள் பிரதிநிதிபோல் ஆய்வு நடத்தும் ஆளுநர்!**

மதுரை சென்றிருந்த ஆளுநர் ராஜேந்திர அர்லேகர், தான் நியமன பதவியில் – அதுவும் கூடுதல் பொறுப்பில் தமிழ்நாடு ஆளுநராக இருப்பதை மறந்து, மக்கள் பிரதிநிதி போல ஆய்வு நடத்தி இருக்கிறார்.

அரசியலமைப்புக்கும் – மாநில உரிமைக்கும் எதிரான இந்தச் செயலில் ஈடுபட்ட ஆளுநருக்கும், இதை அனுமதித்த #SofaModel அரசிற்கும் கடும் கண்டனங்கள்.

ஆளுநர் மாளிகையின் பராமரிப்பே தமிழ்நாடு அரசிடம் இருக்கும் போது, ‘வைகையை அரசு சீரமைக்காவிட்டால் ஆளுநர் மாளிகை களம் இறங்கும்’ என்று அடாவடியாக பேசி இருக்கிறார். ஆளுநரின் இந்த அசட்டுத் துணிச்சலுக்கு ஆளுங்கட்சியின் கையாலாகாத்தனமே காரணம்.

ஆளுநர் பங்கேற்ற அரசு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்தின் முக்கியத்துவம் குறைக்கப்படும் அளவுக்கு, என்ன ‘காம்ப்ரமைஸ்’ செய்யப்பட்டது என்று சட்டமன்றத்தில் கேட்டிருந்தோம்.

**ஆளுநரிடம் சோபா மாடல் அரசின் சமரசப்போக்கு!**

அதற்கு உரிய பதிலைச் சொல்லாத ஆளுங்கட்சியினர், இன்றைக்கு ஆளுநரை ஆய்வு செய்யவிட்டு, மாநில உரிமைகளை காம்ப்ரமைஸ்’ செய்திருப்பது வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது.

சட்டத்துக்குப் புறம்பாக அடுத்தக் கட்சி எம்.எல்.ஏ.க்களை Panic buying செய்யும் ஆளுங்கட்சி, ஆளுநர் நடவடிக்கை எடுத்துவிடுவாரோ என்ற anxiety-யில் அவரது ஆய்வை அனுமதிக்கிறதா?

முந்தைய அதிமுக ஆட்சிக்காலத்தில் அப்போதைய ஆளுநர் ஆய்வுகளில் ஈடுபட்ட போது, அவர் சென்ற இடங்களில் எல்லாம் கழகத்தினர் கருப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு தெரிவித்தோம். கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்காலத்தில் இது போன்ற நிகழ்வுகளை நாங்கள் அனுமதித்ததில்லை.

**மாநில உரிமைகளை தாரை வார்க்கலாமா?**

ஆகவே, மாற்றம் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தவர்கள், மாநில உரிமைகளைத் தாரை வார்க்காமல், ஆளுநர் ஆய்வு செய்யும் நடைமுறையை உடனே நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**கூவத்தூர் ஆட்சிக்கால வரலாறு தற்போதைய குதிரை பேர ஆட்சியில் மீண்டும் திரும்புகிறது!**